உ

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

விவேகோதயம்.

மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தினின்று
வெளிவரும்
மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"அறிவுடையார், எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"—திருக்குறள்.

தொகுதி க. } நள௵ புரட்டாசி௴ 1916௵ செப்டம்பர்௴ { பகுதி அ.

புதல்வர் கடமை.

(189-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

"தந்தை சொன் மிக்க மந்திர மில்லை" என்பதைக் கடைப் பிடித் தொழுகிய நல்லோர் சிலரது செயற்கரிய செயல்களை இதுகாறும் கூறி வந்தோம். இனி, "தாய் சொற்றுறந்தால் வாசக மில்லை" என்பதைக் கடைப் பிடித் தொழுகிய நல்லோர்கள் சிலரையும் குறித்திடுவோம்:

பஞ்ச பாண்டவர்களுள் மூத்தோனான தரும புத்திரனுக்கு விவாக மாகுமுன், அவனுக்கு இளையோனாகிய பீமன் இடும்பியை மணந்ததும்,

துருபதன் செய்திருந்த ஏற்பாட்டின்படி திரௌபதி, மச்சயந்திரத்தை அறுத்துத் தள்ளிய அர்ஜுனன் ஒருவனுக்கே மனைவியாக வேண்டியவள், பாண்டவர்கள் ஐவருக்கும் மனைவி ஆனதும்,

மச்சகந்தியாக இருந்து பரிமளகந்தியான சத்தியவதியின் குமாரராகிய வேதவியாஸர் தேவர நியாயத்திற் கிணங்கக் காசிராஜனது பெண்களான அம்பிகை அம்பாலிகையையும் அவர்களது தோழியையும் கூடித் திருதராஷ்டிரன், பாண்டு, விதுரன் ஆகிய

மூவரைப் பெற்றதும் எங்ஙனம்? இவை யாவும் மாதுர் வாக்கிய பரிபாலனத்தின் பொருட்டே நிகழ்ந்தவை யன்றோ? அதிகம் சொல்வானேன்?

சர்வசங்கப் பரித்தியாகம் செய்த முனிவரும் தாய்மொழி பிறழ்ந்து நடந்தனரில்லை யென்பதற்கு அவர்களில் இருவரைச் சான்றாகக் குறிப்போம்:

"மாறுபட்ட மதங்களென மதிக்கப் பெற்ற
மதங்களைத்தம் மாமதியால் ஒருமை யாக்கி
வீறுபெற்ற வித்தகசங் கரனும் செல்வம்
வெறுத்ததிரு வெண்காட்டு விமலன் றானும்."

துறவறம் புகத் தாம் எண்ணிய பொழுது, தங்களுக் குள்ள நல் விருப்பைத் தம் தாய் மார்க்கு, (அவர்களுக்குரிய வந்தன வழிபாடுகளை இயற்றி) அறிவித்தனர். ஆயினும், தம் மக்களை விட்டு அரைக் கணமும் பிரிந்து நிற்க அவர்கள் மனம் இசைய வில்லை யாதலின், அவர்கள் முதலில் அவர்கள் அதற்கு இடமே கொடுக்கவில்லை. ஆகவே, அம்மஹான்கள் இருவரும தாய் மொழி கடவாது, பின்னும் சில காலம் அவர்களுடன் உறைந்து, முன்னினும் அதிகமாக அவர்களுக்குப் பிரியம் வரும்படி நடந்து கொண்டனர்.

"நாள் செய்வது நல்லோர் செய்யார்" என்பதை உணர்ந்த அப்பெரியோர்கள், தக்க சமயம் எதிர்பார்த்துக் கொண்டிருந்து, ஒரு நாள் தமது சாமர்த்தியத்தாலும், நயமென் மொழிகளாலும் அவர்களை உடன் படுத்தி, அவர்களது அனுமதிபெற்றே சன்யாசிகளாயினர். எங்ஙன மெனில், ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகள், தமது சித்திலஷியால் ஒருமுதலையினது வாயினுள், தம் தாய் காணத் தம்மை அகப்படுத்திக்கொண்டு, அருகில் நின்ற அன்னையை நோக்கி "அன்பொரு வடிவாய் அமர்ந்திடும் அன்னாய்!" யான்முதலைவாய்ப் பட்டேன். துறவியானால் மட்டும்யான் உயிர் பிழைத்தல் இயலும். ஏனெனில், சந்நியாசத்துவம் மறுபிறப்பாதலின், முதலை என்னை ஏதும் செய்ய முடியாது. நீ மனப் பூர்வமாக இப்பொழுது எனக்குத் துறவு மேற்கொள்ள அனுமதி அளியாயாயின் யான் இதற்கு இரையாதல் திண்ணம்" என இரங்கிக் கூறினர்.

ஸ்ரீமத் திருவெண்காட்டடிகள், தாய் மகிழத்தக்க காரியங்களைத் தவறாது செய்து வருகையில், ஒரு நாள், அவளை நோக்கி, "அருமைத்தாயே! பல பிணியும் சில வாழ்நாளுமே உள்ள யான், துறவறத்தாலேயே மேன்மை யெய்தவாகும். நீ என் பிரிவாற்றாய் என்பதை அறிவேன். யான் துறவு மேற்கொள்ளினும், நின்னிற் பிரிந்து நெடுந்தூரத்தில் செல்லேன். எப்பொழுதும் நீ உள்ளவரை உன் அருகிலிருப்பேன். இது சத்தியம். எனது கோரிக்கையை ஈடேற்றுக" எனக் கண்ணீர் விட்டுக் கரைந்து வேண்டினர். இவ்விருவரது தாய்மார்களும் தம்மருமை மக்களது முன்னேற்றத்தையும் நன்மையையும் கருதியவர்களாய் "அங்ஙனமே ஆகுக" என்று மனமுவந்தருளினர். இங்ஙனம் அருளும் முன்னர், அந்நற்றாயர் இருவரும், தமது அந்திக் காலத்தில் தம் மக்கள் எங்கிருந்தாலும் தமக்குதவி, தமக்குரிய கருமத்தைச் செய்ய வேண்டும் என்ற உறுதிமொழி பெற்றனர். இவ் வாக்குறுதியை இவ்விரு பெருங் குரவரும் இனிது நிறைவேற்றிய விஷயம் இனியோரிடத்தில் எடுத்துரைப்போம். இது காறும் சொல்லியவற்றால்,

"பெற்றோர் வாக்கின் படிமைந்தர் பேணிப் புரிதல் கடமைஎன
மற்றே வரும்வெ வாராயன், *மழுவார் கையன், சாகரர்கள்,
கற்றோர் புகழுசங் காதரு, **வெண் காட்டு விமலன், §காண்டீபன்,
பொற்றோன் வீமன், நாலவேதப் பொருள்தேர் வியாசன், இவர்செய்தார்"

என்றவிஷயத்தை ஞாபகப் படுத்தினேம். நிற்க.

" 'தாய்க் கொலை சால்புடைத்து என்பாரும் உண்டு' என்று மாதுர் ஹத்தியையும் அதைப் புரியும் பாதகர்களையும், அறிஞர் இழித்துக் கூறி இருப்ப, பரசுராமன் மட்டும் தாய்க் கொலை புரிந்தது சரியோ? சரியேல், எவனும் தன் தகப்பன் சொல்லி விட்டானென்று தாயைக் கொலைசெய்தால் அது பழிபாவத்திற் கிடனாகாதோ?" எனச்சிலர் எண்ணலாம்- இங்ஙனம் எண்ணுவோர் நாம் இப்பொழுது சொல்லப் புகும் இரண்டொரு விஷயங்களை நன்கு கவனிப்பார்களாக.

பெற்றோர் சொல்லும் தீய கருமங்கள் தமக்கும் உடன்பாடாயின் அவற்றை நிதானித்து யோசியாமலும், காலதாமத

---

*பரசுராமன். **பட்டினத்தார். §அர்ச்சுனன்.

மின்றியும் நிறைவேற்றி, மாதா பிதா வாக்கிய பரிபாலனம் செய்து விட்டதாகத் தமக்குள்ளே மகிழ்ந்தும், பிறரைத் திருப்திப் படுத்தப் பேசியும் திரியும் பேதையர்கள், தமக்கு விருப்பமில்லாத காரியங்களை அப்பெற்றோர் செய்யச்சொல்வாராயின், அக்காரியங் களை மறுக்காமல் மனப்பூர்வமாகச் செய்து முடிப்பார்களோ?

வேதவியாச பகவான் தாய்சொற்கிணங்கித் தமது தம்பியர் மனைவியருடன் சேர்ந்தது போல், தாமும் தமது சோதரர் மனை வியருடன் சேரத் தாய்மொழிக் கிணங்கவும், பீமசேனன் தன் தமையனுக்கு விவாகம் ஆகு முன் இடும்பியை மணக்கத் தாய் மொழிக்கு இணங்கியதுபோல், தாமும் தமது தமையனுக்கு மண முடிப்பதற்கு முன், மணமுடிக்கவே தாய் சொற்கேட்கவும் கூடிய சிலரை இக்காலத்தில் நாம் காணலாகுமே யன்றி, ஆத்ம சுகத்தை யும் தம் நலத்தையும் அற்பமும் கருதாது, கேவலம் பெற்றோர் மொழியைப் பேணும் நன்னோக்கமே தம் நோக்கமாகக் கொண்டு (1) நாடு நீங்கிக் காடு புகுந்து கஷ்டம் அநுபவித்த ஸ்ரீராமனைப் போலும், (2) தந்தை கட்டளைக்குக் கீழ்ப்படிந்து தமது ஆருயி ரையே அர்ப்பணம் செய்த சகரசக்ரவர்த்தியின் அறுபதினாயிரம் மக்களைப் போலும் (3) ஈன்றோரது பூரண சம்மதத்தைப் பெற்றே தாம் எண்ணிய காரியங்களை இனிது நிறைவேற்றிய இருபெருந் துறவிகளாகிய ஆசார்யஸ்வாமிகளையும் பட்டினத்தடிகளையும்போன் றும், (4) அரிதின் முயன்று பெற்ற அனலிற் பிறந்த ஆரணங்கா கிய தன் மனைவியைத் தன் சகோதரர்களுக்கும் அன்னை சொற்படி அகமகிழ்ந்து மனைவியாக அளித்த விசால புத்தியுடைய விஜயனைப் போலும் உள்ள சற்புத்திரர்களைக் காண்பது எவ்வளவு துர்லபம்!

பரசுராமனது பரிசுத்த ஒழுக்கங்களை மறுவற நன்குணர்ந்த மகான்கள் ஒருபோதும் அவன் மீது பழிகூறார் என்பது திண்ணம். அவனுடைய வரலாற்றைச் சிறிது கவனியுங்கள். ஜமதக்கினிமுனி வர்க்கும் இரேணுகாதேவிக்கும் அருமைத் திருமகனாக அவதரித்த இவன், பெற்றோரிடத்துப் பேரன்பு வாய்ந்தவன். இரேணுகை, மன மாசு ஒரு சிறிதுமில்லாளேனும், கார்த்தவீரியனது பேரழகைக் கண்டு வியந்ததன் நிமித்தம், அவளைச் சிரசாக்கினை செய்துவிடுமாறு ஜமதக்கினி முனிவர் தம் மக்கள் யாவர்க்கும் கட்டளையிட்டனர்.

மற்றப் பிள்ளைகள் இது செய்ய மறுக்கவே, தந்தையைத் தெய்வமாகவே பாவித்திருந்த பரசுராமன் மட்டும் தக்ஷணமே தந்தை விருப்பை நிறைவேற்றினன். தந்தை, தன் சொல்லை மீறிய பிற மக்களை நீசர் ஆகும்படிச் சபித்து, பரசுராமனது செயலுக்கு மகிழ்ந்து, அவனை நோக்கி "அன்பார் புதல்வ! நீ விரும்பும் வரத்தைக் கேள். நீ எது கேட்பினும் தரச் சித்தமாக இருக்கிறேன்" எனக் கூறினர். பரசுராமனது பிரார்த்தனையைக் கேளுங்கள். "எந்தாய்! என் தாய் கற்புக் கெடாது உயிர்த்தெழச் செய்வதே யான் வேண்டும் முதல் வரம். நீசத் தன்மை நீங்கி என் தமையன்மார்கள் தபோதனர்களாக வேண்டுமென்பதே எனக்கு அநுக்கிரகிக்க வேண்டிய இரண்டாவது வரம்" என்றனன். இதுகேட்ட ஜமதக்கினி முனிவர், இவனது மாதுர் பக்திக்கும் சகோதர வாஞ்சைக்கும் மெய்ச்சி இவ்விரு வரமும் ஈந்தனர்.

பிரிய சகோதர சகோதரிகளே! இவ்வேண்டுகோளே பரசுராமனுக்குத் தாயிடத்துள்ள பேரன்பை விளக்கப் போதியதன்றோ?

"தந்தையினும் தாய் பிற விஷயங்களில் தன் மகிமையால் ஆயிரம் பங்கு உயர்ந்தவளாயினும், வேதசாஸ்திர நூல்களைக் கல்லாத தாய் சொல்லினும், அந்நூல்களைக் கற்ற தந்தை சொல்லே மேல்" என்ற காரணம் பற்றியே, உத்தமோத்தம புத்திரனை பரசுராமன், (அறிஞர்கள் கேட்ட மாத்திரத்திலேயும் அஞ்சும்) தாய்க் கொலையைக் கூசாது புரிந்தனன் என அறிக. "தந்தை தாய்ப்பேண்" என்பதில், 'முதலிற் பேணத்தக்கது தந்தை மொழி' என்பதைக் குறிக்கவே, தந்தையை முனவைத்தது என்பது பரசுராமனது இச்செய்கையால் இனிது விளங்கும். ஆதலால் பரசுராமனைப் போல் அன்னையிடம் மெய்யன்பும், சாபானுக்கிரக சக்தியுள்ள தந்தையைப் பெறும்படியான பாக்கியமும் எவனுக்குள்ளனவோ, அவனே தந்தை சொற் கேட்டுத் தாய்க் கொலையும் புரிக. பிறன் எவனும் கனவிலும் அதனை நினையாதிருக்கக் கடவன். நிற்க.

"பெற்றோர் வாக்கைப் பரிபாலனம் செய்தல்" என்ற விஷயமாக மற்றும் ஒரு உதாரணம் கூறி அவ்விஷயத்தை நிறுத்துவாம்.

ஆங்கிலத்தில் முதல் முதல் அகராதி இயற்றிப் பிரக்யாதி பெற்ற ஸாம்வல் ஜான்ஸன் என்பவர், தந்தை வாக்கைப் பரிபாலிக்கும் பெருங்குணம் வாய்ந்தவர் என்பது பின்வரும் விஷயத்தால் அறியலாகும்.

அதிசம்பிரமமாக நடந்த ஓர் விருந்துக்கு அழைக்கப்பட்டவருள் இப் பண்டிதரும் ஒருவர். அதிதிகள் யாவருடனும் இருந்த இவர் திடீரெனக் காணப் படவில்லை. போஜனத்திற்கு உட்கார்ந்த யாவரும் இவரில்லாமையின் உண்ணாது காத்திருந்து இவரைப் பலவிடங்களிலும் தேட ஆள் விடுத்தனர். சிறிது நாழிகைகட்கெல்லாம் ஜான்ஸன் பண்டிதர் வியர்த்துக் கன்றிய தேகத்துடன் பாதரக்ஷையுமின்றிக் கண்ணும் கண்ணீருமாக அதிதிகள் இருக்குமிடம் வந்து சேர்ந்தனர். இவரது இவ் வலங்கோல நிலைக்குக் காரணம் அறிய யாவரும் ஆவல் கொண்டனர். அவர்களை நோக்கி, ஜான்ஸன், துக்கம் தொண்டையடைக்க "ஆ! எனக்கு விவரம் தெரிந்தது முதல் எனது தந்தை கட்டளைக்குக் கீழ்ப்படியா திருந்ததே இல்லை. ஆனால், ஒருநாள் மட்டும், நான் வாலிபனாக இருந்த காலத்தில் விளையாட்டில் விருப்புக் கொண்டு, ஒரு பொய்ச் சாக்குச் சொல்லி என் கிழத்தந்தை யிட்ட கட்டளையைச் செய்யா தொழிந்தேன். இது ஒன்றே நான் அவர்பாற் செய்த தவறுரும். இக்கவலைச் சுமை நாள் தோறும் என்னை வருத்தியது. இன்று என்னால் அது தாங்கக் கூடவே இல்லை. ஆகலின் இதற்குப் பிராயச் சித்தம் தேடினேன்: தந்தையார் புதையுண்டிருந்த கல்லறைக்கு முன்பாகப் பாதரட்சையின்றிச் சென்று வெற்றுடம் புடையோனாய் நின்று, என் முதுகில் எவ்வளவு கசையடி பெறக்கூடுமோ, அவ்வளவும் பெற்றுத் திரும்பினேன்" என்று சொல்லி விம்மி விம்மி யழுதார். இவரது கழிவிரக்கத்தைப் பாருங்கள்!

> தெளிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்!
> தாய்சோற் கேட்டலும் தந்தைசோற் கேட்டலும்
> பாசத் தன்பினைப் பற்றற நீக்கலும்
> ஈசற்கே கடன்" என்பதையும,
>
> "தந்தையுரை தட்டியவன், தாயுரை இகழ்ந்தோன்,
> அந்தமுறு தேசிகர்தம் ஆணையை மறந்தோன்
> வந்தமுறை வேதநெறி மாறினவர் நால்வர்
> செந்தழலின் வாயினிடை சேர்வதுமெய் கண்டீர்"

என்பதையும் மறவாதேயுங்கள்.

(இன்னும் வரும்.)

பத்திராதிபர்.

கினிப் புல்.

வரப்புகளிலும் தரிசுகளிலும் தானாக வளர்ந்த புல்லை மாடுகள் தாங்களே மேய்ந்து தின்கின்றன. சில சமயங்களில் புல்லைச் செதுக்கி கட்டுத்துறையில் தீவனமாகப் போடுகிறார்கள். ஆனால் மாடுகள் விசேஷமாய் வளர்க்கப்படும் காங்கேய நாட்டில் விஸ்தாரமான வேலி யடைத்த நிலங்களில் மற்றப் பயிருடன் கலந்தாவது தனியாகவாவது கொழுக்கட்டைப் புல் விதையை விதைக்கிறார்கள். புல் வளர்ந்து மூன்று மாதமானவுடன் மாடுகளை அந்நிலங்களில் ஓட்டி மேய்க்கிறார்கள். சொற்ப நாள் கழிந்து மற்றோரிடத்தில் வேலி யடைத்துப் புல் வளர்த்த பூமியில் மாடுகளை மேய விடுவார்கள். இப்படிச் செய்வதினால் ஒவ்வொரு நிலத்திலும் ஒருதரம் மேயப்பட்ட புல்லுக்கு நன்றாய் ஓங்கி வளர ஒன்று அல்லது இரண்டு மாத சாவகாசம் ஏற்படுகிறது.

இப் புல் மாரிகாலத்தில் புன்செயில் போடப்படுகிறது. தோட்டக் கால்களில் எப்பொழுதும் பயிர்செய்யக் கூடியது கினிப் புல். இதைத் தண்ணீர் வாய்க்கால்களின் கரையோரத்திலும் வீட்டுப் பின்புறத்திலும் பயிர் செய்தால் அதிகப் பிரயாசை யின்றி தினந்தோறும் நமது பசுமாடுகளுக்குப் பசும்புல் கிடைக்கச் செய்யலாம். இந்தப் புல் கோடையையும், தண்ணீர்த் தட்டையும் தாங்கக் கூடுமென்றாலும் கொழுத்த மாசூல் கொடுக்க உரமும் தண்ணீரும் வேண்டியதவசியம். வடிகால் வசதியுள்ள எல்லா நிலங்களிலும் மாமர நிழல்களிலும் இதைப் பயிரிடலாம். நிலத்தை நன்றாய் உழுது ஏகர் ஒன்றுக்கு 30 வண்டி சாணம் குப்பை அடித்து உழுது, ஒன்றரை அல்லது இரண்டரை அடிக்கு ஒரு கோடு, நீளத்திலும் அகலத்திலும் இழுத்து, கோடுகள் சந்திக்குமிடங்களில், வேருள்ள ஐந்தாறு புல்தூறுகளைச் சேர்த்து நட வேண்டும். விதை விதைத்துப் பயிர்செய்யலாமென்றாலும் அவ்விதை முளைத்துப் பயிர் வளர வெகுநாள் செல்லுமாதலால், புல்தூறுகளையே நட்டுப் பயிர் செய்வது நல்லது. மேற்சொன்னபடி நட்டு வேர் ஊன்றின பிறகு புல்லிருக்குமிடத்தை முகடுகளாகவும் (ridges) மத்தியிலுள்ள வெளியைத் தண்ணீர் வாய்க்கால்களாகவும், செய்து விடலாம். மழைகாலத்து, முதலில் பயிர் செய்ய ஆரம்பிப்பது உத்தமம். ஏனெனில் தண்ணீர் இறைவை வேண்டியிருக்கமாட்டாது. கோடை

யில் பத்துப் பன்னிரண்டுநாளுக்கு ஒருமுறை தண்ணீர் இறைக்க வேண்டியிருக்கும். சுமார்ஒரு வருஷத்துக்கு 8 முறை புல் அறுக்கலாம். அறுத்தபிறகு களை எடுத்து கொத்தி வைப்பது நலம். பயிர் அடியில் தூறு கட்டி அநேக கிளைகள் வெடிப்பதினால் புல் வரவர அதிக மாகும். ஒரு நிலத்தில் மூன்று வருஷம வரை இப்புல்லை வைத்திருக்கலாம். பின்பு பேர்த்து விட வேண்டும். இரண்டாவது மூன்றுவது வருஷமும் உரம்போட வேண்டும். இப்படி வளர்க்கப்பட்ட நிலத்திலிருந்து வருஷாவருஷம் ஏகர் ஒன்றுக்கு 25,000 முதல் 40,000 பவுன் நிறையுள்ள பசும்புல் கிடைக்கும். பம்பாய் ராஜதானியில் கிர்க்கிப் பண்ணையில் கறவை மாடுகளுக் கென்றே அநேக வருஷ காலமாக விஸ்தாரமான நிலங்களில் இப்புல்லைச் சாகுபடி செய்து வருகிறார்கள், இப் புல்லால் பால் அதிக மாகிறதென்றும் தெரியவருகிறது. எவருமே கறவை மாடுக்கும் குதிரைக்கும் நல்ல புல் தீவனம் கிடைக்கும் பொருட்டுத் தங்கள் வீட்டின் பின் பக்கத்தில் கிணற்றோரத்தில் இப்புல்லைப் பயிர்செய்து வரலாம். இப்புல்லைப் பயிர்செய்ய விரும்புவோர்கள் புதுக்கோட்டை ஸர்க்கார்பண்ணை மானேஜரிடமிருந்து புல் தூறுகள் இனமாகப் பெற்றுக் கொள்ளலாம்,

K. R. சங்கரையர். M. A. C.

விநோதக் கூற்று.

உபாத்தியாயினி:— பிரமசாரி என்றால் யார்?

சிறுமி:— பெண்டாட்டிகிட்டப் புடுங்கப்படாத சுகபுருஷன்

உபாத்தியாயினி:— யாரம்மா உனக்கு இப்படிச் சொல்லிக் கொடுத்தது?

சிறுமி:— ஆரா? எங்கம்மாவோடு பேசம்போதெல்லாம் எங்கப்பா சொல்லக் கேட்டிருக் கேன்.

பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர்:— ஒரு வாக்கியத்தைக் கரும் பலகையில் எழுதி ஒரு சிறுவனைப் பார்த்து) இதைவாசி.

சிறுவன்:— வாளப்பளம் பளுத்துப்போனால் கொள கொளனு அளுகிக் கீளேவிளும்.

இன்ஸ்பெக்டர்:— வாத்தியாரே! பையன் நன்று வாசிக்கிறானே!

உபாத்தியாயர்:—இந்த எயவுக்கு என்னசெய்யறது? இந்தக் கயுதைக்கு வாயப்பயம் பயுத்துப் போனால் கொயகொயனு அயுகிக்கீயே வியும் என்று அயாதவண்ணம் அயுதும் இன்னும் பயக்கம் புடிபடவில்லையே.

ரா. ராகவசாமி.

உ

சர்வ சமயத்தைப் பற்றியும்.
பகவான் ஸ்ரீகிருஷ்ணனைப் பற்றியும்.
ஓர் சம்பாஷணை.

(192-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

சுந்தரசாஸ்திரி.—பகவான் ஸ்ரீகிருஷ்ணனது பால்ய லீலைகளில் உயர்ந்த தத்துவங்களை அடக்கியிருக்கிறதே தவிர அதில் உலகத்தார் பழிக்கிற விதமாக இழிவான நடத்தையைக் குறிக்கவில்லையென்று தெரிந்தேன். ஆனால் மனிதர்களை அவர் தப்பான வழியில் நடத்தினதாகச் சொல்லுகிறார்களே, அதின் விவரமென்ன?

இராமானந்தர்.— குரு க்ஷேத்திரத்தில் மும்முரமாக யுத்தம் நடந்து வருங்காலத்தில்,15-ஆம நாள் யுத்தத்தில், பாண்டவர்களில் அர்ச்சுனனுக்கும், அவன் குருவான துரோணாசாரியருக்கும், கடுஞ் சண்டை நடநதது. ஒருவரை மற்றொருவர் எவ்விதத்திலும் கொல்ல முடியவில்லை. ஆனால் ஒருவர் மற்றொருவர் பக்கத்திலுள்ள சேனைகளைத் துவம்சப் படுத்திக் கொண்டு திரும்பினார்கள். இந்தச் சமயம் துரோணாசாரியருடைய குமாரன் அசுவததாமா கொலையுண்டு போனானெனறு துரோணாசாரியரிடம் யாரேனும் ஒருவர் சொல்ல வேண்டும என்று ஸ்ரீகிருஷ்ண பகவான் சொனனார். தன் குமாரன் இறந்து போனதாகக் கேள்விப்பட்டால் அவர் அப்பால் யுத்தம் செய்ய மாட்டாரென்பது எல்லாருடைய அபிப்ராயமும். ‘அசுவத்தாமா உயிருட னிருக்கையில் இறந்து போனானென்று நான் பொய் சொல்லமாட்டேன்’ என்றும், ‘அப்படிப் பொய் சொல்வதினால் ஜயம பெறக் கூடுமானாலும் பொய் சொல்லி ஜயிப்பது என் தகமைக்குத் தக்க தில்லை’ யென்றும், அர்ச்சுனன் மறுத்து விட்டான். பீமன், அசுவத்தாமா என்ற யானை ஒன்றைக்கொன்று, ‘அசுவத்தாமா இறந்து விட்டான்’ என்று கூப்பாடு போட்டான். துரோணர் அதைக்கேட்டு மயங்கி, யுதிஷ்டிரர் பொய்சொல்லத் தக்கவரல்லர்

என்று நம்பியவராய், 'அசுவத்தாமா இறந்து போனது வாஸ்தவமா?' வென்று கேட்டு விட்டார். அப்போது யுதிஷ்டிரர் பதில் சொல்லி யனுப்பத் தயங்கிக் கொண்டு நின்றார். பக்கத்தி லிருந்த ஸ்ரீகிருஷ்ண பகவான் "அசுவத்தாமா மரணமானான்" என்று சொல்லச் சொன்னார். ஸ்ரீகிருஷ்ண பகவான் பேரில் பாரத்தைப் போட்டு விட்டு, "அசுவத்தாமா மரணம் அடைந்தது உண்மை" என்று துரோணர் காதில் படும்படி யுதிஷ்டிரர் உரக்கக் கூவினார். ஆனால் தம் வாய்க்குள்ளே மாத்திரம் "யானை" என்ற வார்த்தையைச் சேர்த்தார். கருத்தால் பொய்யையும் வார்த்தையால் மெய்யையும் சொல்வது போல் காட்டினார். 'கிருஷ்ணபகவான் இப்படிப் பிரத்தியட்சமாய் பொய்யைச் சொல்லும்படி சொல்லலாமா?' வென்ற சங்கை ஏற்படுகிறது. கிருஷ்ணன், பரமாத்மா, பரமகுரு. அர்ச்சுனன், யுதிஷ்டிரர் இவர்கள் அவரது சிஷ்யர்கள். சிஷ்யர்களின் மன உறுதியை அறிந்து அவர்களை முன்னிலைக்குக் கொண்டுவர வேண்டியது குருவின் கடமை யென்பது எலலாருக்கும் தெரிந்த விஷயம். அர்ச்சுனன் 'பொய்சொல்ல மாட்டேன்' என்று ஒரே நிலையா யிருந்து மறுத்து விட்டான். யுதிஷ்டிரர் பொய் சொல்லாதவரென்று வெளிப்படையாக எல்லோரும் அ வ ரை நினைக்கும் படியாக நடந்து வந்தாலும், உள்ளூற அவர் மனது உறுதியுள்ள தல்லதென்று அறிந்த பகவான் ஸ்ரீகிருஷ்ணன், அவரைச் சோதித்தார். அப்படிப் பரிசோதிப்பது ஈசுவரனுடைய சுபாவமே. ஏனெனில் மனது உறுதியா யில்லாதவன் மோட்சத்துக்கு அருக னல்லன். யுதிஷ்டிரரை மே ன் மை யா ன ஸ்திதிக்குக் கொண்டுவர இஷ்டமுடைய பகவான் அவரைப் பரிசோதித்ததில் அந்த பரிசோதனையை யதார்த்தமாக அறியாமல் உள்ளுக்குள் ராஜ்ய விஷயத்தில் கொண்டிருந்த ஆசையினால் யுதிஷ்டிரர் பொய் சொன்னார். பின்னால் தான் பொய் சொன்னது பிசகென்று உணர்ந்தார். அதின் நிமித்தம் கஷ்டப்பட்டார். பிற்பாடு, இவர் மரண காலத்தில், இவரை நம்பியிருந்த நாயை விட்டு விடும்படியாக ஒரு தேவர் எவ்வளவோ சொல்லியும், 'விட மாட்டேன்' என்று உறுதியுடன் சொன்னார். "நாயை நான் கைவிட்டேன் எனக்குச் சுதசித்தமாக இப்பொழுது கிடைக்க இருக்கும் சுவர்க்க போகப் பிராப்தியும் தே வை

இல்லை'' யென்று சொன்னார். இவ்விடத்தில் தம் சுயலாபத்தையும் கருதாமல், சத்திய நிலையி லிருந்தார். இவ்விதம் சாதாரண மனிதர்கள் விஷயத்திலும் ஈசுவரன் பரிசோதனை நடைபெறுகிறது. அதை அறிந்து, மன உறுதியுடன் சத்தியத்தையே பெரிதாகக் கருதி நடக்கிறவர்களுக்கு ஆரம்பத்தில் கஷ்டம் நேரிடுவது போல் தோன்றினாலும் முடிவில் சுகமுண்டென்பது உண்மையை அறிந்தவர்களுக்குத் தெரிந்த விஷயமே. விவிலிய நூலில், (1. Kings XXII 11, 19, 20.) ஒரு தேவ தூதன் ஒரு ராஜாவை மயக்கி, தீய வழியில் நடக்கும்படி தான் செய்து விடுகிறதாகச் சொல்ல, அதற்கு இறைவன் இணங்கி, "அவ்விதம் செய்க'' என்று அநுமதி கொடுத்ததாகக் கண்டிருக்கிறது. ஈச்வர சங்கற்பம் ஒன்றே உறுதியாயும் பிறழாமலும் நடைபெற்று விகாச முறையை நடத்துகிறது. இந்த விஷயம் தெரிந்தவர்கள் ஸ்ரீகிருஷ்ண பகவான் செய்கைகளைப் பற்றித் தூஷிக்க மாட்டார்கள்.

சுந்தரசாஸ்திரி.—"அவன் அன்றி ஓர் அணுவும் அசையாது" என்ற பழமொழியைக் கேட்டிருக்கிறேன். நீரும் ஈச்வரசங்கற்பம் என்றே முடித்தீர். வீண்தர்க்கத்தில் காலத்தை செலவழிக்காமல் ஒவ்வொருவனும் பலாபேட்சையன்றி சதா ஈச்வர சிந்தையுடன் தனக்கேற்பட்ட கடமைகளை சரிவரச் செய்து வருவானாகில் இவன் சித்தம் நாளடைவில் சுத்தமாய் ஞானம் பெற்று மோட்சமடைவான் என்ற விஷயம் இப்பொழுது தான் என்மனதில் பட்டது. இனி அங்விதம் செய்துவர முயலுகிறேன். இவ்வளவு தூரம் எனக்கு விவரமாய் எடுத்துக்கூறிய உமக்கு நமஸ்காரம். உம்முடைய ஆசீர்வாதம் எனக்கு எப்பொழுதும் சித்திக்கட்டும். நான் போய் வருகிறேன்.

இராமாநந்தர் —"சுந்தரசாஸ்திரியாரே! நீர் சொல்வதுசரியே—இதுவரையில் நீர் பொறுமையுடனிருந்து கேட்டதைப்பற்றி சந்தோஷிக்கிறேன். ஈச்வரபக்தி உம்மை விட்டு விலகாமலிருக்கட்டும். போய்வாரும்.

கிருஷ்ணாநந்தர்.

கமலாவதி.

அங்கம்—II.

காட்சி-4.

(205–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

இடம்:— மாளவநாட்டில் சபாமண்டபம். காலம்:— முற்பகல்.

[வசந்தசேனன், ஸ்ரீதரன், ஜயகேசரி கொரேசேனன் இவர்கள் வீற்றிருக்கிறார்கள்.]

வ. ஜயகேசரி! ஒரு விஷயத்தைப்பற்றி உன்னிடம் தெரிவிக்கும்படி, ஸ்ரீதரனிடம் சொல்லியிருந்தேனே! அது உனக்குச் சம்மதமா?

ஜய. மகாராஜா இப்படி எல்லாம் கேட்கலாமா? ஸ்ரீதரர் என்னிடம் ஒன்றும் சொல்லவில்லை ஆயினும் என்ன? விஷயம் எதுவாயினும் தங்கள் இஷ்டப்படியே நடக்கச்சித்தமாக இருக்கின்றேன்.

ஸ்ரீ. தந்தாய்! அங்ஙனமாயின், ஜயகேசரியை இன்று முதற் கொண்டே பிரதானமந்திரி யாகச்செய்வது உத்தமம்.— அவன் சொல்வது உண்மையே. நான் அவனிடம் கேட்க மறந்தே போனேன்.

வ. நானும் அப்படியே நினைத்தேன். சரி,— ஜயகேசரி! உன் தந்தை வஹித்த ஸ்தானத்தை வஹிக்க நீதான் தகுந்தவன். இன்று முதல் நீயே இந்நாட்டின் பிரதானமந்திரி.

[ஜயகேசரி தலை வணங்குகிறான்]

கோ. (ஒரு புறமாகத் தனக்குள்) அப்படியா? —சரிதான்.

[ஓர் சேவகன் பிரவேசிக்கிறான்.]

சே மஹாராஜ்! கேகயநாட்டுப் பிரதான மந்திரியாகிய சுத்தியானந்தர், சமுக தரிசனத்திற்கு வந்திருக்கின்றார். — கட்டளை எப்படியோ?

வ. யார், சத்தியானந்தரா? (சற்றுத்தாமதித்து)சரி, வரச்சொல்.

சே. உத்தரவு. [போகிறான்.]

வ. ஸ்ரீதர! சத்தியானந்தருக்கு இங்கு என்ன வேலையிருக்கலாம்?

கோ. அரசே! ஒருக்கால் மறுபடியும் ஏதேனும் யுத்த செய்தி கொண்டு வந்திருக்கின்றாரோ, என்னவோ? தெரியவில்லை. நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

ஸ்ரீ. நமமீது மறுபடியும் படையெடுத்துவர கேகய ராஜனுக்குப் பைத்தியமா? ஒருக்காலும் அப்படியிராது. அப்படியே யிருந்தபோதிலும், தந்தாய்! தாங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம். — ஆ! மறந்தேன். ஒரு நண்பர் எனக்காகக் காத்துக்கொண்டிருப்பார். நான் சீக்கிரம் வந்துவிடுகின்றேன் [போகிறான். சத்தியானந்தன் பிரவேசிக்கிறான்.]

சத். அரசே! வந்தனம்.

[வணங்கி ஒரு நிருபத்தைக் கொடுக்கிறான்.]

வ. அவ்வாசனத்தின் மீது உட்காருங்கள்.

[நிருபத்தைப் பிரித்துப் படிக்கிறான்.]

"அரசே! ஏதோ இது வரையில் நாமிருவரும் விரோதிகளாக இருக்க வேண்டுமென்று தெய்வ சங்கல்பம் இருந்தது போலும்! இதற்கு முன் நிகழ்ந்த விஷயத்தை எண்ணி நான் மிகவும் விசனிக்கின்றேன். கருணையங்கடலாகிய ஸ்ரீதரனைத் தாங்கள் புதல்வனைப் பெற்றது தாங்கள் முன் செய்த தவப்பயனே. நான் தங்களுக்குச் செய்த அபராதத்தைமறந்து, எனதிஷ்டத்தைப் பூர்த்தி செய்வீர்களென்ற முழு நம்பிக்கையுடன் இந் நிருபம் எழுதலானேன். என் புதல்வி கமலாவதிக்கு, ஸ்ரீதரனே தகுந்த மணவாளனென நிச்சயித்து விட்டேன், ஸ்ரீதரனுக்கும் இவ்விஷயத்தில் இஷ்டம் இருக்குமென்றே நான் நினைக்கின்றேன். ஆயினும் ஸ்ரீதரனுடைய இஷ்டத்தையும் தாங்கள் அறிந்து எப்படி

யாவது இவ்விஷயம் நிறைவேறும்படி செய்யுமாறு வேண்டு கின்றேன். எல்லாம் தெரிந்த தங்களுக்கு நான் அதிகம் எழுதவேண்டியது இல்லை. சம்மதித்ததற்குத் தங்கள் கிருபை கூர்ந்தபதிலை விரும்பி எதிர்பார்த்தவண்ணமாக இருக்கும்,

விக்கிரமகேது"

ஜய. அரசே! ஏன் யோசனை? ஸ்ரீதரர் தங்கள் சொல்லை மீறிவிடு வாரோ? தங்களுக்கு ஆக்ஷேபம் இல்லாவிடில், அவருக் கும் ஆக்ஷேபம் இராது.

வ. எனக்குச் சம்மதந்தான். ஆயினும், அவனையும் ஒரு வார்த் தைகேட்டறிவோமே. (சத்தியானந்தனை நோக்கி) சத்தியா னந்தரே! போஜன வேளை நெருங்கிவிட்டது. பிறகு இதைப் பற்றிப் பேசுவோம். செல்வோம வாருங்கள்.

சத். ஆஹா! அப்படியே.

[கொரேசேனனைத் தவிர எல்லோரும் போகிறார்கள்.]

கோ (தனக்குள்) ஒருக்கால் இபபடியிருக்கலாமோ? - ஆம், அப் படித்தானிருக்கு மென்று நினைக்கின்றேன். ஸ்ரீதரன் இப் பொழுது ஒரு மாதிரியாகத் தானிருக்கின்றான். நான் ஒரு சமயம் அவனைக் காணச் சென்றிருந்தபொழுது, ஏதோ தனக்குள் அவன் புலம்பிக் கொண்டிருந்தான். அதை நான் ஒரு புறமாக மறைந்திருந்து கவனித்ததில் என் செவியில் ஒன்றும் புகாவிட்டாலும, "ஆஹா! கண்ணே! இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறு என்னை ஒரு அடியும் நகர வொட் டாமற் செய்தது உன் பார்வை. — கண்மணி! உன்னை நான் மனைவியாக அடையும்படியான பாக்கியம் செய்திருந்தா லன்றோ அடைவேன்" என்ற சொற்கள் விழுந்தன. அந்தக் 'கண்மணி' ஒருக்கால் விக்கிரமகேது வின் புதல்வி கமலாவதியாகவே யிருக்கலாமோ? தவிரவும் சிறிது காலமாக அவன் நூதனமான ஓர் கணையாழியை அணிந்துகொண்டிருப்பதைக் கண்டபோதே, எனக்குச் சந் தேகம் உண்டாயிற்று. ஸ்ரீதரன் கமலாவதியை மணந்து

கொள்வதில் என் மாமனுக்கும் சம்மதமே என்றறிந்தேன். ஸ்ரீதர! நீ சுகம் அடைவதை நான் பார்க்கின்றேன். (சற்றுத் தாமதித்து) இக் சஷ்டத்திற்கு நான் என்ன செய்வேன்? என் பிரயத்தனங்களெல்லாம் வீணாகும் போலிருக்கின்றதே! நான் இந்த ராஜ்யத்தை அடைவதற்காக அநேக பிரயத்தனங்கள் செய்த போதிலும், எல்லாம் வீணாகிக்கொண்டே வருகின்றன! சரி, இருக்கட்டும். நான் இந்தக் கமலாவதியை ஸ்ரீதரன் தனது மனைவியாக அடையாமற் செய்ய வேண்டும். — ஆம், இதுவே என் முதற் காரியம். மற்றவைகளைப் பிறகு பார்த்துக் கொள்கின்றேன்.

[போகிறான்.]

காட்சிமுடிகின்றது.

(இன்னும் வரும்)

K. வேங்கடராமையர்.

சாணக்ய சாஹஸம் என்னும்

சந்திரகுப்த சரித்திரம்.

(207–ஆம் பக்கத் தொடர்ச்சி.)

ராக்ஷஸன் இந்துசர்மனிடத்திருந்த ஐயம் முழுதும் நீங்கியிருந்த காலையில், நந்தர்கள், புதன்கிழமை, பட்டணத்தினின்றும் நீங்கி, ஸைன்யம் இருக்கும் இடம் வரும் விஷயம் பர்வதேசனுக்கு அவனது ஒற்றர் அறிவித்தனர். அவர்கள் புறப்படுந்தினத் திரவே பாடலிபுரத்தில் 'லங்கர்' எற்றும் பொருட்டுத் தன் சேனைகளை இரு பிரிவாகப்பிரித்து, ஒரு பாதி சேனையை இருபிரிவாக்கி அனுப்பிப் பாடலிபுரத்தை இருபுறமும் சூழ்ந்து கொள்ளுமாறு ஏற்பாடு செய்தான் பர்வதேசன்.

இஃதிங்ஙனம் இருக்க, நந்தர்கள் அந்தப்புரத்திருந்த தத்தம் பத்தினிமார்களிடம் சென்று, "நாளை எங்களுக்கு விஜயப் பிரயாணம். யுத்தத்தில் ஜயசீலராகத் திரும்பி விடுவோம்" என்று அறிவித்தனர். இம்மொழிகேட்டதும் அம்மனைவியர், 'பின்னால் உண்டாகப் போகிற சோக

ஸமுத்திரத்தை எதிர்கொண்டு அழைக்கப் புறப்படும் நதிகளோ' என்று கருதும் படியாகக் கண்ணீர் உகுத்தனர். அவர்களிற் சிலர் வாலிக்குத் தாரை கூறிய புத்தியினும் சிறந்த புத்தி நந்தர்களுக்குக் கூறி அவர்கள் யாவரும் நல்வழிப்பட்டு உய்யும் மார்க்கத்தை உபதேசித்தனர். ஆயினுமென்? நவநந்தர்களுக்குக் காலபாசம்கழுத்தில் விழுந்துவிட்டதால் இவையாவும் செவிடன் காதில் ஊதிய சங்கொலியே ஆயின. சமயோசிதமாக அவர்களுக்குசமாதான வார்த்தைகள் உரைத்து அவர்களை உடன் படுத்திக் கொண்டு அவ்விரவைக் கழித்தனர். நிற்க

ராக்ஷஸன் அன்றிரவு உருத்திராக்ஷப் பூனை யாகிய க்ஷபணகனை அழைத்து, மறுதினம் நந்தர்கள் விஜய யாத்திரைப் பிரயாணம் செய்ய ஒரு நன் முகூர்த்தம் குறிக்குமாறு கேட்டுக் கொள்ள, அவன் அவர்களுக்குப் பிரயாணத்திற்கு முற்றும் பொருந்தாத 'விருச்சிக லக்கின'த்தைக் குறித்துத் தந்தான். மறுநாள், பொழுது விடிந்ததும், பாடலீபுரத்திற்கு அதி சமீபத்துள்ள சுந்தரப் பிரஸ்தம் என்ற இடம் சத்ருக்களால் முற்றுகை யிடப்பட்டதைப் பீரங்கி வெடிகளால், தூங்கிக்கொண்டிருந்த ராக்ஷஸன் அறிந்து திடுக்கிட்டு நந்தர்களிடம் வந்தான். வந்து சேர்ந்ததும் ஒட்டகம் ஏறி அதிவேகத்துடன் வந்த இருவர் ராக்ஷஸனிடம் ஒரு கடிதம் கொடுத்தனர். அக் கடிததால் டிங்கிராதன் சேனைக்கும் சத்துரு சைன்யத்திற்கும் கடும்போர் நிகழ்ந்ததில் சகஸேனையில் பலர் உயிரிழந்ததும் பத்ரபடன் சைனியம் அவனுக் குதவியதும், சத்துரு சைன்யம் சுந்தரப்பிரஸ்தத்தை நோக்கி வருவதும் தெரியவந்தது. (இந்தச சுந்தரப் பிரஸ்த பீரங்கி சப்தமே ராக்ஷஸனை நித்திரையினின்றும் முன்பு எழுப்பியது)

இக்கடிதவிஷயம் படித்துக் கொண்டிருக்கும் போதே பத்ரபடன் கடிதமும் கிடைத்தது. அதில் டிங்கிராதன் எழுதி அனுப்பிய விஷயங்கள் விவரித்துக் கூறப் பட்டிருந்தன. இவ்விருகடித செய்தியையும் ராக்ஷஸன் நந்தர்களுக்கு அறிவித்து, "இதுகாறும சமயுத்தமே. ஆயினும் இனி நாம் மூலபலங்களுடன், காலதாமதமின்றி, தண்டிறங்கி யிருக்கும் பாளையம் செல்லவேண்டும்" என்றான்.

ராக்ஷஸன் கூறியபடியே நந்தர்கள் செய்யத் தீர்மானித்தனர். அவர்கள் தமது நித்ய கர்மானுஷ்டானங்களை முடித்துக் கொண்டு யாத்திரா தானம் செய்து சகலாபரண பூஷிதாகளாகத் தமது பெற்றோரிடம் சென்று நமஸ்கரித்து, ஆசீர்வாதம் பெற்று, செல்ல விடைகேட்டனர். அவர்கள் புத்திர்வாஞ்சையால் முதலில் மறுத்தனர். ஆயினும் நந்தர்கள் அவர்களைச் சமாதானப் படுததவே, அவர்கள் 'சிலர் இருந்து சிலர் செல்லுமாறு வேண்ட, அவர்கள் 'சரி' யெனக்கூறி விடைபெற்றுச சென்றனர்.

நந்தர்கள் புறப்படும் பொழுது பல அபசகுனங்கள் தோன்றின. ஆயினும் யாரிதைக் கவனிக்க வேண்டுமோ அவர்கள் கவனிக்கவில்லை. அவர்கள் புறப்பட்ட சிறிது நேரத்திற் கெல்லாம் பத்ரபடனது தூதர் இருவர் வந்து, தர்க்க பாலகனான சிவவர்மனால் சத்துருக்கள் சுந்தாப்பிரஸ்தத்தினின்றும் துரத்துண்ட விஷயம் அறிவித்தனர். நந்தர்கள் இச் சுப செய்தி கொண்டு வந்தோர்க்கு வெகுமதி அளித்து, ராக்ஷஸனை, பாகுராயணன் நகர ரக்ஷணத்தின் நிமித்தம் செய்துள்ள ஏற்பாடுகளைப் பார்த்து வருமாறு அனுப்பிவிட்டுப் பாளையத்திற்குப் புறப்பட்டனர்.

வழியில், அவர்கள் சத்துருநாச ஜபசாலையைத் தூரத்திலிருந்தே கண்டனர். அப்பொழுது தம்மை நோக்கி வந்து கொண்டிருந்த மாஸோபவாஸியைக்கண்டு "இம்மகான் யார்?" எனச்சுற்றி யிருந்தோரைக் கேட்க, அவர்கள் அவனுடைய வரலாற்றைத் தாம் கேட்டவாறு கூறி, அவன் நந்தர்களின் நன்மையின் பொருட்டே 'ருத்விக்' ஆக இருந்து சத்துரு நாச ஜபம் செய்து வரும் விஷயம் அறிவித்தனர்.

நந்தர்கள் மகிழ்ந்து "தாங்கள் வந்த பிறகு நாங்கள் ஜய முறுவதில் ஐயமே இல்லை. ஆயினும் சத்துரு நாசத்திற்குரிய அடையாளங்களை நாங்கள் அறியலாமோ? முனிகளுக்கு மௌன விரதமோ?" என்றார்கள்.

இதற்கு மாஸோபவாஸி, "நமக்கு சாதாரண ஜனங்களிடம் மௌனமல்லாது மகாத்மாக்களிடமும் பக்தரிடமும் மௌனம் வைக்க முடியுமோ? சத்துரு நாச ஜபத்தின் பொருட்டுச் செய்யும் சூலினீ ஜபஹோமங்கள் வெள்ளியன்று மாலை முடிவுபெறும். பூபதிகளே! ஹோம முடிவில் தியானம் செய்து பூரண ஆகுதி தரும் சமயம் திவ்ய வாசனையொடு குளிர் காற்று வீசும். யாவரும் காண ஓர்ஜோதி தோன்றும். தோன்றலும் அக்கினி குண்டத்திலிருந்து சூலினீ தேவதையின் கரங்கள் வெளிவந்து பூரண ஆகுதியை ஸ்வீகரிக்கும். இத்தரிசன விசேஷம் சுகிருதம் உள்ளவர்களுக்கே கிடைக்கும்" என்றான்.

"முனிவரரே! அத்தேவதையின் ஹஸ்த தரிசனத்திற்கு நாமும் வரலாமோ?" என்று நந்தர்கள் கேட்க "தாங்கள் மட்டுமேன்? பந்து மித்திரரையும் அழைத்து வரலாம். தேவதையின் கை மறைந்து, தாங்கள் பிரஸாதத்தைப் பெற்றுக் கொண்டு திரும்பி விடுதிக்கு வருமுன், சத்துருக்களிற் பாதிப்பேர் வயிற்று வலியால் இறப்பர். சத்துருசேனை பெரும்பாலும் ஹதமாய் விடும். மீதி ஸைந்யமும் இறவாது நின்ற சிலரும் எடுப்பர் ஓட்டம். இதற்குத் தாங்கள் அளிக்கும் ஜபதக்ஷிணை "பிராமணர்களிடம் உங்களுக்கு இருக்க வேண்டிய கௌரவமே" நீங்கள் வருவதானால் ஜபசாலையைச் சுற்றிலும் சூத்திரர் முதலியோர் வரக்கூடாது. நாங்கள் அச்சமயம் அவர்களைக் கண்ணால் பார்க்கவும் கூடாது" என்றனன் மாஸோபவாஸி.

நந்தர்கள் இம்மாய யோகியைப் புகழ்ந்து 'பூரண ஆகுதி ஸமயம் அவசியம் சொல்லி அனுப்புக. ஒரு சூத்திரரும் தூரத்திலும் வாராதபடி கட்டளையிட்டு விடுகிறோம்" என்று கூறி நமஸ்கரித்துப் பிராமண அதிகாரர்களை ஜபசாலையைச் சுற்றிலும் காவலிருக்கும்படி ஆக்ஞாபித்து,' விடைபெற்றுச் சென்று தமது விடுதி அடைந்தனர்.

(இன்னும் வரும்.)

வி. பாலம்மாள்.

சோழவந்தானூர் அரசஞ் சண்முகனூர் இயற்றிய

வள்ளுவர் நேரிசை.

(197-ஆம் பக்கத் தொடர்ச்சி.)

மூன்னி வனம்புகுதார் மூதறிவி னோர்மிதிலை
மன்னன் முதலோர்தாம் வள்ளுவரே!—என்னே?
அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவ(து) எவன்? (சு)

(அ-ம் முதலியன):— மூன்னி - ஆராய்ந்து, புகுதார் - புகவில்லை, மிதிலைமன்னன் - மிதிலாபுரி யரசன்: ஜனகன், அறத்து ஆற்றின்-தர்ம வழியில், ஆற்றின்-செய்தால், புறத்து ஆற்றில்-(இல்வாழ்க்கைக்குப்)புறம்பான வன வாழ்க்கையில்: துறவற வாழ்க்கையில்; போஒய் - போய், எவன்?- யாது?

ஜனகன் வரலாறு:—(இவன் இதே பெயரோடு கூடிய நிமிபுத்திரனுவது, சீதையின் பிதாவாவது அல்லன்.) மிதிலை மன்னரில் ஒருவனாகிய இவன், ஹ்ரஸ்வரோமன் புத்திரன். இல்லறத்திருந்தும் இதயம் அடக்கிய வல்லவனாகிய ஓர் மகாயோகி. தனது அரண்மனை ஒருகால் தீப்பற்றி எரிய, ஒருசிறிதும் கவலைப்படாமல், அவ்வரண்மனைப் புறத்தே உலரவைத்த தன் கௌபீனத்திற்காக ஓடிய சுகமுனிவரை 'நல்துறவு' என்று பரிகசித்தோன் இவனே.

சந்திரசே னன்தவத்தாற் செய்யா தனசெய்தான்
மைந் துடன்இல் வாழ்தருமன் வள்ளுவரே!—முந்தும்
இயல்பினால் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல் வாருள் எல்லாம் தலை (எ)

(அ-ம் முதலியன):—செய்யாதன-செய்ய முடியாதவற்றை; மைந்துடன்-வலிமையோடு, இல்- வீடு, முந்தும்-சிறந்த, இயல்பினான்-உரிய இயற்கைப்படி, முயல்வார்- (ஐம்புலன்களையும் அடக்க) முயற்சி செய்வோர், தலை-மேலானவன்.

சந்திரசேனன் தவத்தாலும் செய்ய முடியாததைத் தருமன் செய்தது:— சந்திரசேனன் என்பான் விபுலனது மகன். தருமன் என்பான் சுபுத்தன் என்பவனது மகன். (குந்தி மகன் அல்லன்) இவர்களுள் தருமன் இல்லறத் திருந்தவன். சந்திரசேனன் துறவியானவன். சந்திரசேனன் துறவியான விஷயத்தைக் கேள்வியுற்ற தருமன், தானும் துறவு

கொள்ள இருக்கையில், பிருகு முனிவர் எதிர்ப்பட்டுப் பஞ்சாட்சர மகிமையை உபதேசித்து இல்லறப் பெருமையை எடுத்துரைத்து அவ்வறத்திலேயே அவனிருக்குமாறு செய்து திரும்பினர். நிற்க.

சந்திரசேனன் பின்பு சித்திகளில் வல்லவனுகித தருமனிடம் வந்து தன் வலிமையைக் காட்டி இந்திரனை வரவழைத்தான். தருமன் பஞ்சாக்ஷர வலிமையால் பிரமனையே அழைத்து அவனுக்குக் காட்டினன். சந்திரசேனன் வெட்கித் தருமனையே குருவாகக் கொண்டு உபதேசம் பெற்ருன்.

கன்னன் உயிர்காக்கும் கவசமும்ஈந் தான்;வசிட்டன்
மன்இரந்தும் தந்திலனல் வள்ளுவரே!— உன்னுங்கால்
ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து. (அ)

(அ-ம் பதவுரை):—மன்-அரசன், இர-யாசி, உன்னுங்கால்-ஆராயுமிடத்து, ஆற்றின்-(தமது) வழியில், ஒழுக்கி-(தவம் செய்வோரையும்) நடத்தி, அறன்-(தானும்தன்) தருமத்தினின்றும், இழுக்கா-தவருத, நோற்பாரின்-தவம் செய்வோரின் நிலையினும், நோன்மை - பெருமை, உடைத்து-உடையது.

கர்ணன் உயிர் காக்கும் கவசம் ஈந்தது:—துர்யோதனனது தோழமை பெற்று அங்கதேசாதிபதியான, வள்ளன்மையிற் சிறந்த இவனை, இந்திரன், கிருஷ்ணனது கட்டளைப்படி, தன் மகனுன அர்ச்சுனனது க்ஷேமத்தைக் கருதி யாசிக்க, அவன் தனது உயிர் காக்கும் கவசத்தையும் இந்திரனுக்கு ஈந்தமையே இங்குக் குறிக்கப் பட்டதாகும்.

மன்னவன் இரந்தும் வசிட்டன் மறுத்தமை:—தபோமகிமையிற் சிறந்த விசுவாமித்திரன், ஒரு கால் அரசனுக இருந்து உலகம் ஆண்டவன். ஒருநாள் அவன் காட்டிற்கு வேட்டையாடச் சென்ருன். வேட்டை முடிந்ததும், களைத்துப்போய், சிரம பரிகாரத்தின் பொருட்டு வசிஷ்ட முனிவனது ஆசிரமத்திற்குத் தன் பரிவாரங்களுடன் சென்ருன். தனது இருக்கை புற்ற அம்மன்னனுக்கு வசிஷ்டன் அதிதிபூஜை செய்து, தன்னிடத்திருந்த காம தேனுவைக் கொண்டு, வந்தோர் அனைவர்க்கும் விருந்தளித்தான். அப்பசுவின் தெய்வத்தன்மையை நோக்கி வியந்து மகிழ்ந்த விசுவாமித்திரன், அதனை (பலர்க்கு உதவியாகும்படி)த் தனக்கு உதவுமாறு வசிஷ்டனை இரந்தனன். ஆயினும் வசிஷ்டன் அதற்கு இணங்காமல் சாதுரியமாக "அரசரிடத்திருந்து அந்தணர் பெறலாகுமேயன்றி அந்தணரிடமிருந்து அரசர் பெறலாகாது" என்று கூறிப் பசுவைத் தரமறுத்தான்.

காமநுகர் இல்லறமோ, காட்டில்உறும் அவ்வறமோ
வாய்மையின்ஆய் வார்க்(கு) உயர்வு? வள்ளுவரே!—நோம்இல்
அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்ஆயின் நன்று (௯)

(அ-ம் முதலியன்):—காமம்-இன்பம், நுகர்-அநுபவி, அவ்வறம்-துறவறம், வாய்மையின்-உண்மையாக, ஆய்வோர்க்கு-ஆராய்ந்து பார்ப்போர்க்கு, நோக்இல்-குற்றம் இல்லாத, அஃதும்-துறவறமும், பிறன் பழிப்பது இல்ஆயின்-பிறனால் பழிக்கத் தக்கக் கூடா வொழுக்கத்தோடு கூடியிராவிட்டால், நன்று- (இல்வாழ்க்கையைப்போல்) நன்றே ஆகும்.

கன்னன்இரா மன்முதலாம் காவலரைத் தெய்வம்என
மண்ணுளோர் எண்ணுவதென? வள்ளுவரே!—எண்ணுங்கால்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும் (௰)

(அ-ம் முதலியன):— கன்னன்-கிருஷ்ணன், காவலர்-அரசர், வையம்-உலகம், வாழ்வு ஆங்கு-இல்லறத்தோடு கூடி வாழும் இயல்பினில், வான்உறையும்-விண்ணுலகிலுள்ள, தெய்வத்துள் வைக்கப்படும்-தேவருள் ஒருவனாக வைத்து மதிக்கப்படுவான்.

ஆறுவது அதிகாரம்

வாழ்க்கைத் துணை நலம்.

நாடிமுந்தும் கூலிகொண்டு நல்ல புரூரவன்இல்
வாடாது வாழ்ந்தனளே வள்ளுவரே!— நாடின்
மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (௧)

(அ-ம் முதலியன்):—மனைத்தக்க-இல்லறத்துக்குத் தக்க, மாண்பு-நற்குண நற்செய்கைகள், தன்கொண்டான்-தன்னை நாயகனாகக் கொண்டவனது, வளம் தக்காள் வாழ்க்கை-வரவுக்குத் தகுந்த வாழ்க்கையை உடையவள், துணை-இல்லற வாழ்க்கைக்குத் துணையாயவள்.

புரூரவன் இல் கூலி கொண்டும் வாடாது வாழ்ந்தது:—பிரதிஷ்டான புரத்தரசனாகிய புரூரவன் என்பவனுக்கு ஜயப்பிரதை என்றோர் நற்

குணம் நிறைந்த கற்புடைய மனைவி உண்டு. கலிபுருஷனது மாயையால், அவன் நளனைப் போல், தன, கனக, வஸ்து, வாகன, நாடு, நகரம் முதலியவற்றின் நீங்கித் தன் மனைவி மக்களுடன் காடுபுக்குக கஷ்டமுற நேர்ந்தது. பசியால் களைத்துப் பயணத்தால் இளைத்து வருந்திய இவர்களுக்கு ஆநந்தன் என்பவனது பேருதவி கிடைத்தது. பிறகு இவ் ஆனந்தன் முதலியோரிடம் புரூரவன் கணக்குப் பிள்ளையாக அமர்ந்தான். ஜயப்பிரதையும் கூலிக்கு வேலை செய்ய லாயினள். ஆனந்தன் கீழ்ப் புரூரவனிருந்து பொறுமையுடன் வேலைபார்த்துவந்த பொழுது, சோமபுரியில் உள்ள நவகோடி நாராயண செட்டியென்பானது ஆதரவையும் புரூரவன் பெற நேர்ந்தது. ஓர்நாள், ஜயப்பிரதையின் அழகைக் கண்டு மயங்கிய செட்டி, அவளை நயவஞ்சகமாக ஓர் தனியிடம் வரச் செய்து, தனது தீய எண்ணத்தை நிறைவேற்ற எண்ணினன். இஃதறிந்த அவ்வுத்தமி, அவ்வுள்ளிருந்த ஓர் மரப் பேழையிற் புகுந்து "நான் உத்தமியாயின் என் கணவனைக்காணும் வரைப் பயியற்றிருப்பேனாக. என் கணவன் திறந்தால் அல்லாமல், பிறர் எவர்க்கும் இப்பெட்டி திறவாதிருப்பதாக. ஜலத்தாலாயினும் நெருப்பாலாயினும் மற்றெதனாலாயினும் இதற்கு அழிவுறுதிருக்க," என்று கூறி அதனை அடைத்துக்கொண்டு, அவ்வாறே அதிற் பலகால மிருந்தனள். பிறகு தனது நாயகனது திருக்கை பட்ட மாத்திரத்தில், அவள் பெட்டியினின்றும் வெளிவந்தனள். இவளுடைய முழுவரலாறும் அறியவிரும்புவோர், "புரூரவ சக்ரவர்த்தி கதை" என்பதை வாசித்து அறிக.

வானோர் குரவனுமுன் வாழ்க்கைசிதை வுற்றுநொந்தான்
மானேர் விழிமனையால் வள்ளுவரே!—ஆனா
மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல். (உ)

(அ—ம் முதலியன):—. வானோர்குரவன்—தேவகுரு: பிரகஸ்பதி, மான்நேர்—மானினது விழியொத்த, மனை—மனைவி: தாரை, ஆனா—நீங்காத, மனைமாட்சி—இல்லறத்திற்குரிய நற்குண நற்செய்கைகள், இல்லாள்கண்—மனைவியிடம், வாழ்க்கை—அவ் இல்வாழ்க்கை, எனை—எவ்வளவு, மாட்சித்து — பெருமையையுடையது, இல்— (பெருமை எதும்) இல்லாததே ஆகும்.

வானோர் குரவன் வாழ்க்கை சிதை வுற்றது:—சந்திரன், பிரகஸ்பதியிடம் வித்யாப்பியாசம் செய்கையில், அவனது பத்தினியாகிய தாரையென்பவளுடன் வெகு அந்யோந்யமாகச் சில காலம் வாழ்ந்து பிறகு அவளை அபகரித்துக் கொண்டே போய் விட்டான். பெண்டாட்டியைப்

பறிகொடுத்த பிரகஸ்பதி, இந்திரனைத் துணையாகக் கொண்டு சந்திர னொடு கடும்போர் புரிந்தும் அவளை மீண்டும் பெற முடியவில்லை. கடை சியில் பிரமன் சந்திரனுக்கு நல்லவார்த்தை சொல்லித் தாரையை விட்டு விடச் செய்தான். இத்தாரைக்கும் சந்திரனுக்கும் பிறந்தவனே சந்திர வம்சத்திற்குத் தலைவனுகிய புதன்.

நெய்தும் இனிதுற்றீர் நீயிர். யயாதிவெள்ளி
வைதசா பம் பெற்றுன் வள்ளுவரே!—வையத்துள்
இல்லதென் இல்லவள் மாண்பானல்? உள்ளதென்
இல்லவள் மாணுக் கடை? (௩)

(அ—ம் முதலியன):—நெய்தும்-நெய்யும் தொழில் செய்து வந்தும், இனிது உற்றீர்—மேன்மை அடைந்தீர், நீயிர்—நீர், வெள்ளி—சுக்கிரன், இல் லதுஎன்?-இல்லாத பொருள் எது?, இல்லவள்—மனையாள், மாண்பானல்— நற்குணநற்செய்கை யுள்ளவளாயின், மாணுக்கடை—நற்குணம் நற்செய் கை யில்லாதவளாயிருந்தால்.

திருவள்ளுவர் ஏலேல சிங்களைப் போன்ற லக்ஷாதிபதிகளை மாணு க்கராகப் பெற்றும், வறுமையைப் பெருமையா வலியவே கொண்டு, செய் தொழில் அனைத்தினும் நெய்தொழில் தீதில தென்று அத்தொழி லைக் கையாடி, உத்தமியாகிய வாசுகியுடன் இல்லறம் நடத்தி வந்த விஷ யமே அவரைப் பற்றி இங்குக் குறித்ததாகும்.

யயாதி வெள்ளி வைத சாபம் பெற்றது:—நகுஷனது குமாரர்களில் ஒருவனுன யயாதிக்குத் தெய்வயானை, சன்மிஷ்டை என இரு மனைவியர் உண்டு. தெய்வயானை சுக்கிராசாரியன் மகள். சன்மிஷ்டை விடபவன்மா என்பவனது மகள். இவர்கள் இருவரையும் மணமுடிப்பதன் முன் சன் மிஷ்டை தெய்வயானைக்கு இழைத்த ஓர் தீங்கினிமித்தம், சுக்கிராசாரி யயாதியை நோக்கி, "சன்மிஷ்டையைத் தெய்வயானையைப் போலவே எல்லா சுகங்களையும் நீ பெறச் செயலாம். ஆயினும், சயனவிஷயத்தில் மட்டும் அவளை விலக்கி வைகக வேண்டியது" என்று கண்டிப்பாகக் கட்டளை யிட்டிருந்தனன். இதற்கிணங்கியே யயாதி அவளை மணந்தும், ஒருநாள், சன்மிஷ்டை அவனை மயக்கிச் சேர்ந்து பூரு என்பவனைப் பெற் றனள். இஃது அறிந்த சுக்கிராசாரி, தன்னை அவமதித்ததன் நிமித்தம் வெகுண்டு, யயாதியை நோக்கி "உன் யௌவன கர்வமே இதற்குக் கார ணம் ஆதலின் நீ விருத்தன் ஆகுக" எனச் சபித்தனன். இதுவே அவன் சாபம் பெற்றதன் காரணமாகும்.

[இச்சாபம் பெற்றபின் அவன் வருந்தியதையும் தெய்வயானைக்கும் இதனால் கேடுண்டானதையும் உணர்ந்து சுக்கிரன், யயாதிக்கு இரங்கி "நின் புதல்வருள் ஒருவனுக்கு உன் கிழத்தனம் ஈந்து அவனது இளமையைப் பெறுக. இங்ஙனம் இளமையைத்தர இயைந்தவனுக்கு உன் அரசை யளிப்பாயாக" என்றான். தெய்வயானையின் மக்கள் இளமையை மாற்றிக் கொள்ள விரும்பவில்லை. சன்மிஷ்டை மகன் பூரு மனமகிழ்ந்து உடன் பட்டான். யயாதி மகிழ்ந்து அவனது இளமையைப் பெற்றுப் பிறகு பூருவுக்கே அரசளித்தான்.]

(இன்னும் வரும்.)

ம. கோ.

சிறுவர்க்காகும் கதைப்பூங் கொத்து.

கதை—1.

பெரியோரை அண்டியிருப்பார்க்குச் சத்துரு பயம் இல்லை.

ஒரு சமயம் கைலாஸ வாஸியும், பகவானும், பார்வதி நாதருமான பரமசிவன் நீராடக் கங்காநதி சென்றார். அச்சமயம் படமெடுத்து அவரது சடை மீதாடி, அச்சடைக்கு ஆபரணமாக விளங்கிய ஒரு நாகம் ஆகாயத்தில் வட்டமிட்டுக் கொண்டிருந்த கருடனைப் பார்த்து, "இவனே எனக்கும் என்னைச சேர்ந்தவர்களுக்கும் ஜன்மப் பகைவன். இவனால் என்னைச் சேர்ந்தவர் அநேகர் கொல்லப் பட்டார்கள். பகவானை அண்டியிருக்கிற என்னை இந்தச சத்துரு கொல்லுவதற்குச் சக்தியுடையவனில்லை. இந்தச சத்துருவை அவமதிக்க இப்பொழுது நான் சக்தியுள்ளவன்" என்று நினைத்துக் கருடனை நோக்கி, "ஐய! கருட! குடும்பத்துடன் தாம் சௌக்கியமா?" என்று கேட்டது. கருடன், பகவானை யண்டியிருந்ததால் நாகத்தைக் கொல்லுவதற்குச் சக்தியில்லாதவனாகி வெட்கி நின்றான். இது கண்டு பாம்பு சந்தோஷ மடைந்தது.

மெலியோர் வலிய விரவலரை அஞ்சார்
வலியோர் தமைத்தாம் மருவிற்—பலியேல்
கடவுளவிர் சடைமேல் கட்செவி அஞ்சாதே
படர்சிறையப் புள்ளரசைப் பார்த்து —நன்னெறி.

கதை—2.

தேவர்களின் கருணையாலேயே மானிடர் சுகமாக வசிக்கின்றார்கள் அவர்களுடைய கிருபை யில்லாவிடில் துன்பமே வரும்

முன்காலத்தில் எல்லாப் பர்வதங்களுக்கும் சிறகுகள் இருந்தன. அவை பட்சி போற் பறந்து சென்று, தம்மிஷ்டப்படி கிராமதிலோ, நகரத்திலோ, உட்கார்ந்து பெரிதும் உயிர்ச் சேதமும், பொருட்சேதமும் உண்டு பண்ணின. அதை யறிந்த இந்திரன் தனது வஜ்ராயுதத்தால் அப்பர்வதங்களின் சிறகுகளை அரிய ஆரம்பித்தான். அவைகளிற் சில கல்மாரி பொழிந்து எதிர்த்து யுத்தம் புரிந்தும், இந்திரன் லோகானுக்கிரகத்தின் பொருட்டு அவற்றின் சிறகுகளை வெட்டியே தள்ளினன். மைநாக பர்வதம் மட்டும் பயந்து சமுத்திரத்தில் மூழ்கி இன்னும் தலை காட்டாது இருக்கிறது.

"காற்றால் மரங்களுக்கும் காதுபனிக் காலத்தால்
நாற்ற மிகுகமல நன்மலர்க்கும்—ஏற்றமிகு
வச்சிரத்தால் மாமலைக்கும் வஞ்சகரால் நல்லோர்களும்
அச்சம் விளையும் அறி" —அரும்பொருட்டிரட்டு (2-ம் தொகுதி)

கதை—3.

தெய்வத்திற்கே பிராணியை ஆக்கவும் அழிக்கவும் வல்லமை உண்டு.

பாம்பாட்டி ஒருவன் வயிற்றுப் பிழைப்பிற்காக ஒரு பாம்பைப் பிடித்து, ஒவ்வொரு நாளும் அதற்கு ஆகாரம் கொடுத்து வந்தான். அவன் அதை ஒருநாள் தன் வீட்டில் ஒரு பெட்டியில் வைத்து பத்திரமாக மூடி விட்டுக் கிராமாந்தரம் சென்றான். வேலை மிகுதியால் ஐந்தாறு தினங்கள் அங்கு அவன் இருக்க நேர்ந்தது. இதற்குள் பாம்பு ஆகாரமில்லாததால் இளைத்துப்போய் சாகுந்தறுவாயிலிருந்தது. பெட்டியிலிருந்து வெளியே வருவதற்குக்கூட அதற்குச் சக்தியில்லாதிருந்தது. தன் உயிரிலிருக்கும் ஆசையை விட்டு அது இருக்கும் சமயத்தில், ஆகாரத்திற்காக அலையும் ஓர் எலி பாம்புப் பெட்டியினருகில் வந்து தின்பண்டம் அதனுள் இருக்கலாம் என்றெண்ணி அதைத் துளைத்துக் கொண்டு உள்ளே நுழைந்தது. ஐயோ! பாவம்! பாம்பு அதைத் தின்று, அத் துவாரத்தின் வழியே வெளிச் சென்று ஓடி விட்டது.

ஒன்றை நினைக்கின் அதுஒழிந்திட் டொன்றாகும்
அன்றி அதுவரினும் வந்தெய்தும் —ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன் செயல —நல்வழி

கதை—4

துரதிர்ஷ்டமுள்ளவன் எங்குச் சென்றாலும் அவனை ஆபத்துத் தொடர்ந்தே வரும்.

ஒருகாலத்தில் வழுக்கைத் தலையன் ஒருவன் நடுப்பகலில், ஓர் அவசர காரியத்தி னிமித்தம் ஒரு கிராமத்தை நோக்கிப் போய்க் கொண்டிருக்கையில் கடும் வெயிலால் மிக வருந்தினான். அவன் தலை வெடித்தே போகும் போலிருந்தது. நிழலில் தங்கி இளைப்பாறச் சமீபத்தில் ஏதேனும் மரம் கண்ணுக்குத் தோன்றுகிறதா என்று பார்த்தான். சிறிது தூரம் சென்று ஒரு பனை மரத்தைக் கண்ணுற்றதும் ஓடி அம்மர நிழலில் உட்கார்ந்தான். அப்பொழுது பழுத்து முதிர்ந்து ஆடிக் கொண்டிருந்த ஒரு பனம் பழம், பெருங்காற்று அடித்ததும், அவனுடைய வழுக்கைத் தலையில் படீரென்று விழுந்தது. அதனால் வெயிலில் காய்ந்து கொண்டிருந்த அவன் மண்டை உடைந்தது. வலி பொறாதவனாய்ப் பூமியில் மூர்ச்சையாய் விழுந்தான் வழுக்கைத் தலையன். ஐயோ! பாவம்! இந்நிலையில் அவன் என்ன செய்ய முடியும்?

ஊழிற் பெருவலி யாவுள? மற்றொன்று
சூழினும் தான்முந் துறும். —திருவள்ளுவர்

கதை—5.

சிலமனிதர் தமக்குக் கிட்டாத பொருளுக்குத் தோஷம் கற்பித்து அதைவிரும்பாதவர் போல் நடிக்கிறார்கள். அப்படி நடப்பது வெட்கக் கேடானது.

ஆகாரத்திற்காக அலைந்து திரிந்து கொண்டிருந்த ஒரு நரி ஒரு திராட்சைக் கொடியிலிருந்த நல்ல முதிர்ந்த பழங்களைக் கண்டது. "எனக்கு இத் திராட்சைப் பழத்தி லாசை மிகுதி- என்மனைவிக்குக் கொஞ்ச காலமாக என் பேரில் கோபம். அதையும் தீர்க்க வேண்டும். "மருந்தே யாயினும் விருந்தோடுண்" என்பது பெரியோர் வாக்கு. ஆகையால் இதை என் மனைவியுடன் திருப்தியாகத் தின்பேன். அதனால் அவளுக்கு என் மீதுள்ள கோபம் தணியும். என்னிடம் பிரியமும் ஏற்படும்" என்று நினைத்துக் குலையை நோக்கி, அதைப் பறிக்கப் பன்முறை எழும்பிக் குதித்தது. அக் குலை உயரத்தி லிருந்ததால் அது அதை எட்ட முடியவில்லை. தன் முயற்சி வீணானது கண்டு, நரி அக் குலையைப் பார்த்து "சீ! இப் புளிப்புப் பழங்களைச் சுடு" என்று சொல்லி விட்டு வந்தவழியே சென்றது.

தாங்கருதித் தேடுபொருள் தம்கைக் கிடையாதேல்
ஈங்கறிவில் கீழோர் இழித்துரைத்துப்—பாங்கமையா
இப்பொருளையாம் வேண்டேம் என்று பலர்நகைக்கச்
செப்பித் திரிவர் தினம். —அரும்பொருட்டிரட்டு.

கதை—6.

ஒரு வனத்திலுள்ள புளியமர மொன்றில் ஆணும் பெண்ணுமாக இரண்டு சிட்டுக்குருவிகள் வசித்து வந்தன. அவை பகற் பொழுதில் வெளியே பறந்து சென்று இரை யெடுத்து மாலை வேளையில் தமது கூடு வந்து சேரும். ஒருநாளிரவில் ஆண் குருவிக்கு திடீரென்று ஒரு சந்தேகம் தோன்றியது. உடனே அது பெட்டையைப் பார்த்து "பிரியே! நாம் தூங்கும் சமயத்தில் ஆகாயம் இடிந்து விழுந்து விட்டால் நாமென்ன செய்வோம்?" என்றது. அதற்குப் பெட்டை "பிராணநாதா! வருங் கால சம்பவங்களை ஒருவனும் அறிய முடியாது. ஒரு வேளை ஆகாயம் இடிந்து விழுந்தாலும் விழக் கூடும். ஆகையால் பூமியில் வாசம் செய்பவர்கள் எப்பொழுதும் ஜாக்ரதையாகத்தா னிருக்க வேண்டும்." என்று பதில் சொல்லியது. அதற்கு ஆண், "ஆனால் நாம் என்ன செய்யலாம்?" என்று கேட்டதும், பெண் குருவி, "பிராணேச! பயத்தை விட்டு விடுங்கள். நான் காலைத் தூக்கிக் கொண்டு மல்லாந்து படுத்துக் கொள்ளுகிறேன். ஒருக்கால் ஆகாயம் விழுந்தாலும் நான் அதைத் தாங்கிக் கொண்டு விடுகிறேன்" என்றது. அது கேட்டு ஆண் குருவி, பயம் நீங்கித் தூங்க ஆரம்பித்தது.

அஞ்சாமைக் கஞ்சி அதில்தப்பு மாறொன்றை
நெஞ்சோர்தல் கீழோர் நெறி. —அரும்பொருட்டிரட்டு.

(இன்னும் வரும்.)

வி. சு. நடராஜன்.

விடுகதை வினவுக்கு விடை.

1. மேதினி எலாம்புகழ் விவேகோ தயமே!
நசையொடு தமிழ்பயில் விசுவநா தன்உனை
விரும்பி வினவிய விடுகதைக காம்விடை
'பன்றியே ஆம்'எனப் பகர்ந்திடு வாயே.

2. 'புகழ்விழையான்' கொண்ட பொருள் 'மதி'யே என்னத்
தருவிவே கோதயமே சாற்று.

கிளிச்சிறை யிறையனார்.

சென்றமீ" வெளிவந்த இரண்டு விடுகதைகளுக்கும் 23 பேர்கள் விடையளித் துள்ளார்கள். இவர்களிற் பெரும்பான்மையோர், வினவி விரும்பிய பாக்களில் விடையளித்தனரில்லை. ஐவரே தக்க பாவில் விடையளித்துள்ளார்கள். —பத்திராதிபர்.

சுதேசமித்திரன் பத்திராதிபராக விளங்கிய
ஸ்ரீமத் ஜீ. சுப்ரமண்ய ஐயரவர்களது
பிரிவாற்றாது கூறிய
இரங்கற் பாக்கள்.

தென்னிந்தி யாவிலுள தேசாபி
 மானிகள்தம சென்னி சூடும்
மின்னுபுகழ் மாமணியே! ஜீ.சுப்ர
 மணியன்எனும் மேலோய்! ஈங்கே
இன்னொருவர் நின்போல என்றென்றும்
 யாம்காண இன்மை யாலே
துன்னும்இரு மடங்குதுயர் நின்பிரிவால்.
 எமைகொளித்தாய்? சொல்லாய்! சொல்லாய்.! (க)

"ஒத்ததறிந் திடுவானே உயிர்வாழ்வான்.
 மற்றையான் உலகில வாழ்நதும்
செத்தவருள் ஒருவனென வைத்தெண்ணப்
 படுவ"னெனும் 'தேவர் வாக்கை,
உத்தமனே! உயர்ந்தோரும் இழிந்தோரும்
 கைக்கொள்ள உன்சு தேச
Xமித்திரனில் ஒளிபரப்பி வைத்தனை. நின்
 மதிவலிமை விளம்பற் பாற்றே? (உ)

*இந்தியதே சீயசபை கூட்டுமொரு
 முயற்சியினில் இலகி நின்று
சந்ததமுறு பம்பாய்நற் றலைநகரிற்
 கூடியஅச் சபையின் கண்ணே
வந்துமுதற் கூட்டத்தில், முதற்றீர்மா
 னஞ்செய்த மாட்சி சானறோய்!
அந்தணர்தம் குலமணியே! இந்தியாற்
 றுயலற அகன்ற தென்னே? (ங)

தேசத்திற் குறைத்தலையே செய்தொழிலா
 மேற்கொண்டு தினமின் நாட்டார்

Xசூரியனும் ஆம். *நாஷனல் காங்கிரஸ்.

வாசித்து ராஜாங்க வகையறிந்து
தத்தமகருள் மதிப்பி னோடும்
நேசப்பாக செய்திடுவோன் நிகரில்லா
நெறிஇதென நீஅந் நாளில்
யோசித்தே "ஹிந்து"எனும் பத்திரிகை
தொடங்கினை.நின் யூக மென்னே? (ச)

நந்நாட்டுக் கைத்தொழில்கள் நசித்துவரற்
கிரங்கிஅவை நலமுற்றோங்கப்
பன்னாட்டும் சென்றுதொழில் பயில்வுறுபல்
மாணவர்க்கும் பணந்தந் தூக்க
இந்நாட்சு தேசநிதி ஆக்கித்தீ
பாவளியாம் ஏமமீயும்
நன்னாளில் தொகைசேர்த்தந் நிதிவளர்த்தாய்
பொருளியல்தேர் ஞானவானே! (ரு)

சூழுறுநீர் இங்க்லாந்தில் துரைத்தனத்தார்
முன்பாலர் §சூழ்ச்சி சொல்ல
ஆழிகடந் தேகினை.நின் அருமகள்பா
லியவிதவை அல்லல் தீர்ந்து
வாழ்வுறுவான் அவட்குமறு மணமுடித்தாய்!
மதிவலியால் மனம், சொல், செய்கை
தாழ்வறஇம் மூன்றையும்ஆ சாரச்சீர்
திருத்தத்திற் சமர்ப்பித் தாயே! (சு)

பேருக்குப் பலருழைப்பர்; பெருமைக்குப்
பலருழைப்பர்; பிறங்கும் செல்வச்
சீருக்குப் பலருழைப்பர்; செல்வாக்கிற்
குழைப்பா பலர், சென்னை யுள்ளோர்.
பாருக்குள் தன்னலமே பாராட்டா
துளத்துறு நற் பரிவினோடே
ஊருகசென் றுழைத்திடுவோர் உன்னையலால்
வேறுளரோ உரைப்பதற்கே? (எ)

ஓய்ந்தறியாத் தேசஉழைப் பால்காங்க்ரஸ்
தலைவனெனும் உயர்ந்த சீர்த்தி

---

§வேல்பி கம்மிஷன்.

வாய்ந்திடற்கும், வைஸ்ராயின் மாசபைஅங்
கத்தினனும் மதிப்பு மேவ
ஆய்ந்தனுப்பப் பெறுதற்கும், உரிமையிக
உளக்கிருந்தும், அவற்றுள் ஒன்றும்
எய்ந்திடலில் குறையினாம் இந்தியர்க்கு
மதிக்குறைவே என்னும் காலே. (அ)

வாழ்வுறுநாள் மதியாது, மரித்தபின்பு
சிலைநாட்டும் வழக்கிற் கேற்ப
ஏழமைசேர் இப்புவியோர் ஏதோஞா
பகச்சின்னம் இயற்றுகின்றார்;
வாழியஅச் சின்னங்கள். வாழியநின்
பத்ரிகைகள் வளமுற்றோங்கி
வாழியநின் ஞாபகமே வழிவழியே
தேசபக்தி மலிந்து வாழி' (கூ)'

வே. 'தாளத் தே'வையன் எம். ஏ. எல். டி.

காலத் தருமை.

இழந்தபொருள் நல்லுழைப்பின் எய்தலாம் என்ப;
இழந்தசுகம் இன்மருந்தின் என்ப;—இழந்தமதி
எய்தலாம் கல்வியினால் என்ப; இழந்தநாள்
எய்துவதோ எந்நாளும் இல்.

ம. கோபாலகிருஷ்ணையர்.

விவேகோதய முக்கிய அறிவிப்பு

வருடசந்தா: ரூ 2-0-0. மாணவர்க்கும் பென்பாலார்க்கும் ரூ 1-8-0.
மாதிரிப் பத்திரிகை வேண்டுவோர் 2-அணா ஸ்டாம்பு அனுப்புக. அவர்கள் சந்தாதாரராகிவிடின் இவவிரண்டணாவைக் குறைத்துக் கொண்டு மீதித் தொகையைச சந்தாவாக மணி ஆர்டர் செய்து விடலாம். பதில் வேண்டுவோர் ரிப்ளை கார்டு அல்லது ஸ்டாம்பு அனுப்புக.

விளம்பர விகிதம்:— பக்கத்திற்குப் பிரதி மாதமும் விளம்பர விகிதம் ரூ 5. சகாய விகிதம் நீண்டகால விளம்பரங்களுக்கு.

மானேஜர், "விவேகோதயம்"
மதுரை.

உ

சமாசாரக் கொத்து.

நச்சினார்க்கினியர் ஞாபகச் சின்னத்தமிழ்ப் பரீக்ஷை:—மதுரையில் உள்ள நாலுகலாசாலைகளிலும், நான்காவது 'பாரம்' முதல் ஜூனியர் இண்டர் மீடியேட் வரையிலுள்ள 5 வகுப்புக்களிலும் பயிலும் மாணவர்களுக்கும் தமிழறிவு மிகுதற் பொருட்டு மதுரை மாணவர் செந்தமிழ்ச் சங்கத்தார் வருஷந்தோறும் நடத்தி வரும் இப் பரீக்ஷை இவ்வருஷம் ஸேதுபதி உயர்வித்யாசாலையில் நன்கு நடைபெற்றது. இப் பரீக்ஷைக்கு 186 ஆண்பிள்ளைகளும் 14 பெண்பிள்ளைகளும் வந்தெழுதினர்.

இச்சங்கத்து "சன்முக வித்யாசாலை"யிற் பயிலும் மாணவர்க்கு சென்றமீ சங்கத்து அக்ராஸநாதிபதியவர்களின் மாளிகையில் தனித் தமிழ்ப் பரீக்ஷை நடைபெற்றது, இதில் ஆண்மக்கள் ஐவரும், ஒரு சிறுமியும் வந்தெழுதினர். இப்பரீக்ஷைகளின் முடிவு அடுத்த பத்திரிகையில் வெளி வரும்.

ஓர் அதி விசனகரமான மரணம்:—பல உயிர்களைக் காப்பாற்றிவந்த பரோபகாரியாகிய மதுரை அஸிஸ்டண்ட் ஸர்ஜன் டாக்டர் விட்டல்ராவ் மதுரையில், உற்றோர் உறவினரும் ஊராரும் அதிகாரிகளும் பெரிதும் இரங்கப் பிளேக் நோயால் இறந்தமைக்கு விசனிக்கின்றோம்.

மாணவர் செந்தமிழ்ச் சங்கம்:—விஜயதசமியன்று நடக்கவேண்டிய இச்சங்கத்து நச்சினார்க்கினியர் ஞாபகச்சின்ன மஹோத்ஸவம் சிற்சில அசௌகரியங்களால், நவம்பர்மீ நடைபெறும்.

ஸெப்டம்பர்மீ "காலவரிஷி" என்ற நாடகத்தையும் "பீஷ்மரது பிரமசரியம்" என்ற நாடகத்தையும் இச்சங்கத்தார் நன்கு நடித்தனர். இனி குமண சரித்திரம் கூடிய சீக்கிரம் நடிக்கப்படும்.

தாதாபாயின் பிறந்த நாட் கொண்டாட்டம்:— 'மாப் பெருங்கிழவ' ராகிய ஸ்ரீ தாதாபாய் நௌரோஜியின் 92ஆவது பிறந்தநாட் கொண்டாட்டம் மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கத்தவரால் வெகு விமரிசையுடன் ஆகஸ்டுமீ 4உ கொண்டாடப்பட்டது. அன்று கூடிய கூட்டத்தில் ஸ்ரீ. ம. கோபாலகிருஷ்ணையா அவர்கள் அக்கிராசனம் வகித்து அத 'தாதா'வின் சரிதையை வாசித்து அவர்க்கும் ஏனைத்தேசாபிமானசிங்கங்கட்கும் மங்கல வாழ்த்துக் கூறினர்."

அறிவிப்பு:—மெது பார்வைக்கு அனுப்பப்பட்டுள்ள புத்தகங்களைப் பற்றிய மதிப்புரை அடுத்த சஞ்சிகையில் வெளிவரும்.

பத்திராதிபர்.

ஆனரபிள் சேதுபதியவர்கள்.

தேவகோட்டை, திருச்சுழியல்
தி. அ. சு. அண்ணாமலைச்செட்டியாரவர்கள்
மாளிகைக்கு விஜயமான பொழுது சாற்றியவை.

பூமலியும் வாவி புடைசூழ் முகவைநகர்
நாமலியுஞ் சீர்முத்து ராமலிங்க—கோமகனீ
விண்ணோர்க் கிறைபோல் விளங்கு திருக்கோலங்
கண்ணாரக் கண்டேன் களித்து.

ராம னிருக்கை அயோத்தியென்பர் நானதனாற்
கோமகனிற் காணவிங்குக் கொள்கருத்தேன்—பூமுன்பே
தேவையென விந்நகர்நீ சேர்தவத்தாற் செப்புவியப்
பியாவ ருணாசெய்கு வார்.

முல்லை மலர்மாலை மொய்த்த புயாசலத்தாய்
இல்லையெனு தேற்போர்க் கீவள்ளால்—தொல்லுலகிற்
கல்வி நிறையாயுள் கண்ணிய நற்புகழ்பல்
செல்வமுடன் வாழி தினம்.

செள. வேலுச்சாமிக்கவிராயர்.

ஸ்ரீ வ. உ. சிதம்பரம் ப. : .வர்கள் நூல்கள்.

மனம்போல வாழ்வு;—இஃது இம்மை மறுமை இன்பங்களை அடைதற்குரிய நெறிகளைத் தெளிவாகக் கூறும் அரிய நூல். இது முற்றிலும் திருத்தப்பட்ட இரண்டாம் பதிப்பு.

மெய்யறிவு'— இதில் அறமும் பொருளும் இன்பமும் வீடும் அவற்றைச் செய்யும் வழிகளும் பலஉபமானங்களோடு மிகச சுருக்கமாகவும விளக்கமாகவும் கூறப்பட்டுள. இது நீதிநூல்களின் காரணமெனத் தக்கது.

அகமே புறம்:—இகத்திலும் பரத்திலும் மேலான நிலைகளை அடைதற்குரிய மார்க்கங்களை வரிசைப்படுத்தி இனிமையாகக்கூறும் ஒரு சிறந்த நூல். இதனை ஒவ்வொருவரும் கற்றல் இன்றியமையாதது.

வலிமைக்கு மார்க்கம்:—இதில் எளிய நிலைமையை எய்தியுள்ளோர் வலிய நிலைமையை எய்துதற்குரிய வழிகள் விரிவாகவும் தெளிவாகவும் யாவரும் கைக கொள்ளததக்க விதத்திலும் கூறப்பட்டுள்ளன. இதுவும் வெளிவந்து விட்டது.

ஒவ்வொன்றின் விலையும் அணா எட்டு, வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதிப் பெறுக.

வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள்,
பெரம்பூர், சென்னை.

பொருத்தமான ஔஷதம்.

அதிக மருந்துகளைப்பற்றி விசேஷ விளம்பரம் வரும் அல்லது வாராதென்பது கேள்வியல்ல. வரத்தான் செய்யும். அப்படி வருவதும் காலத்துக்குப் பொருந்தி இருக்கிறது.

மெதுவாய்க் குணந்தரும் மருந்துகளை ஜனங்கள் வாங்கி உபயோகிப்பார்களா? அல்லது எவ்விதவியாதிக்கும் உடனே குணத்தையும் தேகபலத்தையும் கொடுக்கிற எங்கள் அற்புதமான

ஆதங்க நிக்ரஹ மாத்திரை.

களை உபயோகித்து நலம் பெறுவார்களா? வென்பதுதான் கேள்வி. இந்த ஆ. நி. மாத்திரைகள் மூத்திரேந்திரிய சம்பந்தமான மேக ரோகங்களை வேரோடு களைந்து, மனதுக்கும் தேகத்துக்கு முள்ள பலஹீனத்தை நீக்கி, சுகமான ஜீரணசக்தியைக் கொடுக்கின்றன. அவைகள் ரத்தத்தை சுத்தி செய்து விரைதியாக்கி நரம்புஸ்தானங்களை உறுதிப்படுத்தி, புத்தி தீக்ஷண்யத்தைக் கொடுத்து, வீரியஸ்கலித ரோகங்களைக் குணப்படுத்துகின்றன. இவை தாம் பலத்தைக் கொடுக்கத் தக்க திவ்ய மருந்து.

மருந்து செய்வதில் கெடுதி விளைவிக்கக்கூடியவைகள்
ஒன்றும் சேர்க்கப்படவில்லை.

32 மாத்திரை கொண்ட டப்பி 1-க்கு விலை ரூ 1.

எங்கள் காமசாஸ்திரம் என்னும் புத்தகத்தில் சரீரசம்பந்தமான விஷயங்கள் அடங்கியிருக்கின்றன. கேட்போருக்கு அதை இனமாய்க் கொடுக்கிறோம்.

அதை ஒவ்வொருவரும் வாசிக்க வேண்டிய தவசியம்.

ஒரு பெரிய வேலை.

எந்த உயர்ந்த உத்தியோகத்திலிருந்தாலும் கூலிவேலை செய்தாலும் தத்தம் தேகத்தைக் காப்பாற்றிக் கொள்வதுதான் முதல் வேலையென்பதை யெல்லோருக்கும் ஞாபகப்படுத்துகிறோம்.

வைத்திய சாஸ்திரி,
மணிசங்கர் கோவிந்தஜீ,
ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
77, மேலக் கோபுரவீதி, மதுரை.

ஸ்ரீ கிருஷ்ண விலாசம் பிரஸ், திருமங்கலம்.